

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராம கிருட்டிணன் சந்தித்து தந்தை பெரியார் நடத்திய ‘குடிஅரசு’ இதழ் தொகுப்பு (1925 – 1949. 43 தொகுதி, 19 ஆயிரம் பக்கம்) நூலின் வெளியீட்டு விழாவிற்கு அழைப்பு விடுத்தார். உடன் சென்னை மாவட்டத் தலைவர் ஜனா விஜய், சென்னை மாவட்டச் செயலாளர் குமரன், ‘பெரியார் பாதை’ ஆசிரியர் கருமலையப்பன், மண்டலப் பொறுப்பாளர் பொள்ளாச்சி பிரகாஷ், ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

# முதலமைச்சர் விஜய்யின் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முன் போராட்டம்!

சென்னை, ஆக. 18 – 100 நாள் ஆட்சியின் சாதனை என த.வெ.க. அரசு தம்பட்டம் அடிக்கும் நிலையில், முதலமைச்சர் விஜயின் சென்னை பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முன்பு சுகாதாரச் சீர்கேடுகளைக் கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொடுங்கையூர் வேதாந்தா முருகப்பா தெருவில் கடந்த சில மாதங்களாக கழிவுநீர் வழிந்தோடி வருகிறது. இது குறித்து அப்பகுதி மக்கள் மாநகராட்சி நிர்வாகத்திற்கு பல முறை புகார் அளித்தனர். ஆனால், இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் முதலமைச்சர் விஜயின் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். த.வெ.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

### கர்நாடக மாநிலம் – சாம்ராஜ் நகர் அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொன்றவர்கள் மீது

# வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா சி.எம்.சார்?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



*நெல்லை, ஆக. 18 - முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.*

*கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தோமையார் பகுதியில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர் தமிழ் மக்கள் விவசாயக் கூலி வேலை செய்து வாழ்ந்து வருகின்றனர்.*

*சம்பவத்தன்று சமையலுக்குத் தேவையான காய்ந்த விறகுகளை எடுப்பதற்காக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மலைப்பகுதிக்குள் சென்றதாகவும், வனக்காவலர்கள் இவர்களை தவறான வார்த்தைகளால் திட்டி கொலை வெறித் தாக்குதலில் ஈடுபட்டதில் இருவர் மரணம் அடைந்ததாகவும், அதன் பின் வனத்துறையின் உயர் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு இறந்தவர்களையும், மற்றவர்களையும் வனவிலங்கு வேட்டைக்கு வந்த போது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.*

*பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ”தமிழர்” என்ற காரணத்தினால் “கர்நாடக காங்கிரஸ் அரசு” இது குறித்து கொலை வழக்கு பதிவு செய்யவோ, குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லவோ, நிவாரணம் அறிவிக்கவோ இதுவரை முன்வராதது கண்டிக்கத்தக்கது.!*

**நிவாரணம் வாங்கிக் கொடுப்பீர்களா?**

*இந்நிலையில் அம் மாவட்டப் பொறுப்பு காங்கிரஸ் அமைச்சர் புட்டா ரங்கா ஷெட்டி அழுத்தத்தால் அப்பகுதி மதச்சார்பற்ற ஜனதா தளம் சட்டமன்ற உறுப்பினர் மஞ்சுநாத் உறவுகளை இழந்து நிற்கும் நம் தமிழ் சொந்தங்களை அழைத்து தான் 10 லட்ச ரூபாயும், அரசிடம் 5 லட்ச ரூபாயும் பெற்றுத் தருவேன், இதோடு இப் பிரச்சினையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கண்டிப்புடன் மிரட்டும் தொனியில் சடலங்களை வாங்கிக் கொள்ள வைத்திருப்பது வேதனைக்குரியது.*

*கர்நாடக காங்கிரஸ் ஆட்சியில் பாதுகாப்பில்லாமல் உயிரை இழந்து நிற்கும் நம் தமிழ் சொந்தங்களுக்கு வாய் திறந்து நியாயம் கேட்கிறீர்களா CMsir? நிவாரணம் வாங்கிக் கொடுப்பீர்களா CMsir? அப்பாவி தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ தமிழர்களை கொன்றவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா CMsir? அல்லது வழக்கம் போல் காவேரிமேகதாது விவகாரத்தில் கர்நாடகா காங்கிரசுக்கு அஞ்சி, நடுங்கி பயந்து தமிழர்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டு ஓடி ஒளிந்தது போல் இதிலும் ஒளிந்து கொள்வீர்களா CMsir?*

*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.*

# மேக்கே தாட்டு அணை! ஒருமைப்பாட்டின் மீது வைக்கும் வேட்டு!

இந்திய நிலப்பரப்பு ஒரு துணைக்கண்டம் என புவியியல் அறிஞர்கள் வரையறுத்துள்ளார்கள். எனவே, இங்கு புவியியல் அமைப்பு மலைத்தொடர்கள், பீடபூமிகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள் உள்ளடக்கிய பகுதிகள் இயற்கையாகவே அமைந்திருக்கும். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்ற பின்னர், 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுது, கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதியான தேவிகுளம் பீர்மேடு பகுதிகளில் தமிழர்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றமையால், அந்தப் பகுதிகள் தமிழ்நாட்டிற்குரியது என வாதாடப்பட்டது. அதற்காகப் போராடப்பட்டது.

இதேபோன்று, கர்நாடக மாநிலத்தில் உள்ள குடகுப் பகுதியில் தமிழர்கள் அதிகம் வாழ்கிறார்கள். மேலும் காபி, தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாகவும் இருக்கிறார்கள் என்ற வாதம் முன்வைக்கப்பட்டு, குடகுப்பகுதி தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. அதற்காக போராடப்பட்டது. அதுபோன்று திருத்தணி, திருப்பதி குறித்தும் இத்தகைய வாதங்கள் முன்வைக்கப்பட்டது.

அன்றையதினம் தமிழ்நாட்டில் தேசியத் தலைவர்களாக கருதப்பட்டவர்களில் ஒருவரான பெருந்தலைவர் காமராஜரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மற்றவர்களும் தேவிகுளம் பீர்மேடு பகுதியும், குடகுப் பகுதியும் தமிழ்நாட்டுடன் இணைக்காவிட்டாலும், விடுதலைப் பெற்ற இந்திய பகுதியில்தானே இருக்கிறது என்ற வாதம் முன்வைக்கப்பட்டு மேல் குறிப்பிட்ட பகுதிகள் முறையே கேரளாவோடும், கர்நாடகத்தோடும் இணைக்கப்பட்டது. அன்றைய தினம் தேசிய உணர்வுமிக்க பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் நாட்டினுடைய ஒற்றுமை உணர்வுக்கு ஊறு விளைவித்துவிடக்கூடாது என்கின்ற தேசியக் கண்ணோட்டத்துடனும் இந்தப் பகுதிகளெல்லாம் விட்டுக்கொடுத்து, சமரச ஏற்பாட்டை செய்ததன் மூலம் இந்திய நாட்டின் ஒற்றுமையை வலிமைப்படுத்தினார்கள் என்பது வரலாறு.

ஆந்திராவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதியான திருத்தணி- திருப்பதி பகுதிகளில், திருத்தணி தமிழ்நாட்டிற்கும், திருப்பதி ஆந்திராவிற்கும் கிடைக்குமாறு சமரச ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், இந்த மொழிவாரி மாநில பிரிவினையில் தமிழ்நாட்டிற்கு உருவான சங்கடம் என்பது பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புக்கான பகுதியும், கேரளாவிற்கு ஒதுக்கப்பட்ட தேவிகுளம் பீர்மேடு பகுதியிலுள்ளது. இதுபோன்று காவிரி நதியின்மீது தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் கர்நாடகப் பகுதியான குடகுப் பகுதியில் பெரும்பாலும் உள்ளது. மேலே குறிப்பிட்ட இந்தப் பகுதிகள் கேரளாவிற்கும், கர்நாடகத்திற்கும் ஒதுக்கப்பட்டபொழுது, அன்றைய தேசியத் தலைவர்கள் இன்று எழுந்துள்ள நீர்ப்பங்கீட்டு பிரச்சினையைப் போல எதிர்காலத்தில் உருவாகாது என்று கருதினர். அப்படியே வந்தாலும் நடுவன் அரசு தேசிய உணர்வோடு, பிராந்திய உணர்வுகளுக்கு சிறிதும் இடம் கொடுக்காமல் சுமூகமாக தீர்த்துவைக்கும் என்று நம்பினர். ஆனால், காலச் சுழற்சியில் அரசியல் மாற்றங்கள் காரணமாக பெரியாறு அணை குறித்தும்,

காவிரி நீர் பங்கீடு குறித்தும் தொடர்ந்து திட்டமிட்டுப் பிரச்சினைகள் உருவாக்கப்படுகிறது. வழக்குகள் உச்சநீதிமன்றம் வரையிலும் சென்றது. காவிரிநீர் பங்கீட்டுக்கு நடுவர் மன்றமும் அமைக்கப்பட்டு தீ ர்ப்பளித்தது. ஆனாலும் கர்நாடக அரசும், கேரள அரசும் மாறி மாறி பிரச்சினைகளை உருவாக்கி உரிய நீர்ப் பங்கீட்டினை வழங்க மறுக்கிறது. பெரியார் அணையை பொருத்தமட்டில் இன்றும் வலிமையாகத்தான் உள்ளது என்று அறிவியல் வல்லுநர்கள் சான்றளித்தப்பின்னரும் அணையின் நீர் கொள்ளளவு 152-அடியிலிருந்து நீர்மட்டம் குறைக்கப் பட்டிருக்கிறது.

அதற்கு காரணம் கேரள மாநிலத்தில் உள்ள இடுக்கி நீர் தேக்கத்திற்கு தண்ணீர் திருப்பி விடப்படவேண்டும் என்பதற்காகத்தான் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை குறைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். தொடர்ந்து பல்வேறு காரணங்களையும் ஒவ்வொரு ஆண்டும் முன்வைக்கிறார்கள். மேலும் இதேபோன்றுதான் கர்நாடகாவிலும் காவிரியின் உப நதிகளில் (Tributaries) அணைகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். நடுவர் மன்ற தீர்ப்பிற்குப் பின்னரும், தீர்ப்பின்படி வழங்கப்பட்ட காவிரி நதிநீர் பங்கீட்டு அளவும் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.


கர்நாடக அரசும், கேரள அரசும் ஒரு காலகட்டத்தோடு இந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மறுக்கிறது. தொடர்ந்து ஆண்டுதோறும் இந்தப் பிரச்சினைகளை ஏதாவதொரு வடிவத்தில் உருவாக்கி காலத்தே பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதற்கு தடைகளை உருவாக்குகிறது. இந்தப் பிரச்சினைகளில் குறிப்பாக கர்நாடகாவிற்கும், கேரளாவிற்கும் உள்ள சாதகமான சூழ்நிலை எதுவெனில் அவர்களது மாநிலங்கள் மேல்பகுதியில் இருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு வடிகால் பகுதியில் அமைந்துள்ளது.

காவிரி நதிநீர் பிரச்சினையைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு காவிரியின் மேல் ஆயக்கட்டு உரிமை (Upper Riparian Rights) இருக்கிறது. அதேபோன்று காவிரியின் கீழ் ஆயக்கட்டு உரிமை (Lower Riparian Rights) தமிழ்நாட்டிற்கு இருக்கிறது. இதில், காவிரியாற்றுப் பாசனப்பகுதிகளில் மேல் ஆயக்கட்டு பகுதியும், கீழ் ஆயகட்டு பகுதியும் சரிநிகர் சமமான பங்கீட்டு உரிமையைப் பெற்ற பகுதிகளாகும்.

ஆனால், இந்த நதிநீர் பங்கீட்டுக் கோட்பாட்டைத் தொடர்ந்து கர்நாடக அரசு மதிப்பதாகத் தெரியவில்லை. கர்நாடக மாநில காவிரி நதிநீர் பாசனப்பகுதி மேல் பகுதியில் இருப்பதால் ஆங்காங்கே உபநதிகளிலும், கிளை நதிகளிலும் தடுப்பணைகள் கட்டி காவிரி ஆற்றின் தமிழ்நாட்டுக்கான நீர்வரத்தை கணிசமாக குறைத்து விடுகிறார்கள். கர்நாடக அரசு இந்த திட்ட மிட்ட நடவடிக்கையால் மேட்டூர் அணை நிரம்புவதில் ஆண்டுதோறும் சிக்கல் ஏற்படுகிறது. இதனால் தமிழ்நாட்டினுடைய நெற்களஞ்சியம் என்று தொன்று தொட்டு பாராட்டப்பட்ட தஞ்சை தரணி காலத்தே நெற்பயிர் செய்திட இயலாத சூழ்நிலையை ஒவ்வொரு ஆண்டும் கர்நாடக அரசால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. கர்நாடக அரசின் இந்த ஒருதலைப்பட்சமான சிந்தனையின் உச்சகட்டமாக தமிழக எல்லைப் பகுதியிலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மேக்கேதாட்டு பகுதியில் அணை கட்டுவதற்கான முயற்சியை தீவிரமாக மேற்கொண்டுள்ளார்கள். கர்நாடக அரசின் இந்த முயற்சி நெற்களஞ்சியமான தஞ்சை தரணியை பாலைவனமாக்கிவிடும் என்ற அச்சம் ஒவ்வொரு தமிழருடைய நெஞ்சத்திலும் கொழுந்துவிட்டு எழத் தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டுக் காவிரிப்படுகை விவசாயிகளின் நீராதாரமான காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கே தாட்டுவில் தடுப்பு அணை கட்ட கர்நாடக அரசு எடுக்கும் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டும் டெல்டா விவசாயிகளை ஒரணியில் திரட்டும் பொருட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த 03.08.2026 அன்று தஞ்சையில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், இயக்கத்தின் இளைஞரணி செயலாளரும், தமிழக அரசியல் வானில் வளர்பிறையாக வளர்ந்துவரும் இளம்தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அறப்போராட்டமும், அதில் அவர் பேசியதை, பழனிவேல் கம்பால் அடித்தார் என்பதை பழனி, வேல்கம்பால் அடித்தார் என்று பொருள் கொள்வதைப்போல் தவறாகப் புரிந்து கொண்டு அவரை கைது செய்யத்துடித்த காவல்துறையும் அதற்கு தூபமிட்ட ஆளுகிற அரசின் ஆணவமும் அதை முனைமழுங்கச் செய்த மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால பிணையும் அதனை தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டமும் என்று தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காவிரி படுகை விவசாயிகளுக்காக எடுத்த முயற்சிகளும் தொடுத்த கணைகளும் கார் உள்ள வரை காவிரி நீர் உள்ள வரை காலத்தின் பக்கத்தில் கல்வெட்டுகளாக இருக்கும்.

காவிரிநதிநீரை பங்கீடுவது தொடர்பாக தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்கள் இடையே அரை நூற்றாண்டுக்கும் மேலாக நதிநீர் தாவா இருந்துவரும் நிலையில் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அதன் இடைக்கால தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் என்ற உத்தரவு கிடைக்கபெற்றது. அதன்பின்னர் நடுவர்மன்றம்



**பொன்.முத்துராமலிங்கம்**
*முன்னாள் அமைச்சர்*
*கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்*

வழங்கிய இறுதித் தீர்ப்பின்படி 192 டி.எம்.சி.யாக குறைந்த நிலையில் அதற்கு எதிராக அன்றைய கர்நாடக அரசு உச்சநீதிமன்றத்தில் செய்த மேல்முறையீட்டில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரின் அளவு 192 டி.எம்.சி. லிருந்து 177.25 டி.எம்.சி. யாக மீண்டும் குறைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆனால், காவிரிப்படுகை மாவட்டங்களில் குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவங்களில் முப்போகம் விவசாயம் செய்வதற்கு குறைந்தது 250 முதல் 300 டி.எம்.சி. தண்ணீர் தேவைபடும்நிலையில் மேற்படி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி 177.25 டி.எம்.சி. தண்ணீரை வேறுவழியின்றி தமிழ்நாடு ஒப்புக்கொண்டபோதும் காலப்போக்கில் அதையும் தருவதற்கு மனம் இல்லாமல் கர்நாடகம் மறுத்து வருவதற்கு கடந்த கால நிகழ்வுகளே சான்றுகளாகும். ஏற்கனவே தமிழ்நாடு அரசு சட்டப்படி காவிரி நீரில் பெற்ற உரிமைகளை தக்கவைத்துக் கொள்வதற்கு மீண்டும் சட்டப்படி போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதால், யானை வரும் பின்னே மணி ஒசைவரும் முன்னே என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றம் நாடுவதற்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழகம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததை நாட்டுமக்களும் டெல்டா விவசாயிகளும் நன்கு அறிவார்கள். என்னதான் சட்டரீதியாக போராடினாலும் கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகளில் தண்ணீர் நிரம்பி வழிந்தால் அல்லது வழியக்கூடிய சூழ்நிலை வரும் போது மட்டுமே கடந்த காலங்களில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட்டதாக தப்புக்கணக்கு காட்டி வருகிறது. அப்படிதான் இப்போதும் கர்நாடகத்தின் கபினிஅணை நிரம்பி ததும்பி வழியும் உபரிநீர் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது.

அவ்வாறு கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் 2005-2006, 2007-2008, 2018-2019, 2022-2023 மற்றும் 2025-2026 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டுமே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உபரிநீர் கடலில் கலக்கும் நிலை ஏற்பட்ட போதுமட்டுமே தமிழகத்திற்கு போதுமான தண்ணீர் வந்தது. மற்ற ஆண்டுகளில் தமிழகத்திற்கான தண்ணீர் தேவையில் விவசா யத்திற்குப் பற்றாக்குறைதான் நிலவியது. பெரும்பாலான ஆண்டுகளில் உபரிநீரும் காலம் கடந்து மழை பெய்வதன் மூலம் வருவதால் வழக்கமாக ஜீன் 12ஆம் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் அணை திறப்பும் தள்ளிப் போகிறது. அதன் விளைவாக மூன்று போகங்களில் குறுவை, தாளடி ஆகிய இருபோக சாகுபடி செய்யமுடியமால் ஒரு போகமான சம்பா சாகுபடி மட்டுமே சமீப காலங்களில் காவிரிப் படுகை பகுதியில் விவசாயம் நடந்து வருவதை அறிவோம்.

ஆனால், குறுவைப் பயிர்கள் வாடினால் என்ன! டெல்டா விவசாயிகள் எக்கேடு கெட்டுப்போனால் எங்களுக்கு என்ன! நாங்கள் திட்டமிட்டபடி “மேக்கே தாட்டுவில்” அணைகட்டியே தீருவோம் என்று எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு கர்நாடக முதல்வர் சிவக்குமார் வரிந்துகட்டி சூளுரைப்பதும் அதற்கான முயற்சிகளில் அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டி முழுவீச்சில் ஈடுபட்டு உள்ளது. இது இந்திய அரசின் கூட்டாட்சிக்கு கேடு விளைப்பது ஆகும்.

ஆம், மேக்கே தாட்டு இந்திய ஒருமைப்பாட்டை உடைக்கும் வேட்டு ஆகிவிடக்கூடாது என்றால் ஒன்றிய அரசு அனுமதி வழங்கக்கூடாது. ஒருவேளை கர்நாடகத்தின் புதிய அணைகட்டும் திட்டமான மேக்கே தாட்டுவில் தடுப்பணை கட்டப்பட்டால் தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய உபரிநீர் வரத்தும் இல்லாமல் போகும். அதனால் நஞ்சை குலுங்கும் தஞ்சைத் தரணி பாலைவனமாகும் பரிதாபநிலை ஏற்படும். ஆகையால், சர்வதேச நதிநீர் சட்டவிதிகள் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு அதற்கு எதிரான உச்சநீதிமன்ற தீர்ப்பு, ஆகியவற்றிற்கு எதிராக காவிரியின் குறுக்கே மேக்கே தாட்டுவில் அணைகட்டி தண்ணீரின் போக்கை தடுத்து தமிழ் நாட்டிற்குமான நீர்வரத்தை தடைசெய்வது நதிநீர் தாவா சட்டத்திற்கு எதிரானது என்பதோடு இயற்கை நீதிக்கும் மாறானது ஆகும்.

எனவேதான் முன்னாள் முதல்வரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பேச்சுவார்த்தை என்கிற பெயரில் முதல்வர் ஜோசப் விஜய் சருக்கி விழக்கூடாது என்று எச்சரிக்கை உணர்வோடு கால் நூற்றாண்டு காலம் தமிழ்நாட்டின் முந்தைய அரசுகள் நடுவர்மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் நீண்டகாலம் ஏறி இறங்கி உச்சநீதிமன்றத்தின் கதவுகளை தட்டி திட்டமிட்டு நடத்திய சட்டப் போராட்டகளின் மூலம் தமிழகம் பெற்ற காவிரி நதிநீர் உரிமைக்கான காவிரிப்படுகையின் ஜீவாதார உரிமையை நிரந்தரமாக தக்கவைத்துக் கொள்வதற்கு தற்போது மீண்டும் உச்சநீதிமன்றத்தை நாடியிருப்பது காலப்பொருத்தம் மட்டும் அல்ல சால பொருத்தமும் ஆகும்.

காவிரி பிரச்சினையில் காலத்தே செய்ய வேண்டிய கடமையையும், கைமாறு கருதாத கடமையையும் ஒருசேர செய்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் அணிவகுப்போம்! ஆர்ப்பரிப்போம்! செல்வோம்! வெல்வோம்! காவிரி நீருரிமைக்குக் காப்புரிமை பெறுவோம்.